4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

ஈ. நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு 1981 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்''.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (தொடர்ச்சி).

ஆ. நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

9. வரவு-செலவுத் திட்டம்—1981–82—விவாதம்—(தொடர்ச்சி.)

* திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இந்த அரசு இரண்டாவது தடவையாக பதவிக்கு வந்து, ஓராண்டு காலத்திற்குள் தனது இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தை அவையின் முன் வைத்துள்ளது. பொதுப்படையாக வறுமைக்கோட்டிற்குக் கீழே 52 சதவீத மக்கள் இருக்கிறார்கள். எங்கும் காணாத அளவிற்கு